# குழந்தைகளைத் தத்தெடுத்தல்: ஓர் இஸ்லாமிய நோக்கு

A.K. Bishrul Rifath[1], M.N. Rishadh[2] & M.J.M. Farij[3]

[1,2,3]Jamiah Naleemiah, Beruwala, Sri Lanka.
rifadhbish@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

குழந்தையை தத்தெடுத்து வளர்த்தல் என்பது, குழந்தைப்பேறின்மை போன்ற காரணங்களுக்காக வேறொரு பெற்றோருக்குப் பிறந்த குழந்தையை தனது குழந்தையாகக் கருதி, தனது சொந்தக் குழந்தையாக வளர்ப்பதனை,பொதுவாகக் குறித்து நிற்கின்றது. தத்தெடுத்து வளர்த்தல் என்ற இந்த நடைமுறை வரலாற்றில் எப்போது, எங்கு தோற்றம் பெற்றது என்பதற்கான தெளிவான சான்றுகள் இல்லாதபோதும், இந்த நடைமுறை பரவலாக எல்லா சமூகங்களிலும் போல பல்வேறு வடிவங்களில் அன்று தொட்டு நிலவி வருவதனைக் காணலாம். இஸ்லாம் அரேபிய மண்ணில் உதிக்கின்ற காலத்திலும் கூட, அந்த ஜாஹிலிய்ய சமூக சூழலிலும் 'குழந்தைகளைத் தத்தெடுத்தல்' என்ற சம்பிரதாயம் புரையோடிப்போயிருந்தது. இறைதூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கூட ஸைத் பின் ஹாரிஸாவை தத்தெடுத்து வளர்த்தமை இதற்கான தெளிவான எடுத்துக்காட்டு. இஸ்லாமிய ஷரீஆ இந்த நடைமுறையை ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவந்தது.இதிலுள்ள சாதக பாதகங்களை சரியாக அடையாளம் கண்டு , சாதகமான அம்சங்களைப் பேணியும் , பாதகமான அம்சங்களைக் கலைந்தும் , நடைமுறை சாத்தியமான ஒரு கட்டமைப்பை இஸ்லாம் இதற்கு வழங்கியுள்ளது. அதேபோன்று பிழையான வழக்காறுகளைக் கொண்ட தத்தெடுத்தல் முறைமைக்கு பதிலீடாக பல மாற்றீடுகளை இஸ்லாம் அடையாளம் காட்டியுள்ளது.இன்றைய சமூக அரங்கில் இஸ்லாமிய ஷரீஆவுக்கு முறண்பட்ட பிழையான வழக்காறுகளைக் கொண்ட 'குழந்தையைத் தத்தெடுத்தல்' முறைமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், இது பற்றிய இஸ்லாமிய ஷரீஆவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி, குழந்தைப் பேறு இல்லாதவர்கள் மற்றும் உபரியாக பிள்ளைகளை வளர்க்க விரும்புவோருக்கு இஸ்லாம் முன்வைக்கும் மாற்றீடுகள் குறித்து இங்கு ஆராயப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** அத் தபன்னீ – (தத்தெடுத்தல்), இஸ்லாத்தின் நிலைப்பாடு, மாற்றீடுகள்.

## ஆய்வின் அறிமுகம்

இன்று உலகளாவிய இஸ்லாமிய எழுச்சியின் விளைவாக சமூகத்தில் காணப்படுகின்ற அனைத்து விவகாரங்களுக்குமான இஸ்லாமிய கண்ணோட்டத்தை அறிந்து கொள்ள வேணடும் என்ற ஆர்வம் சமூக மட்டத்தில் மிகவும் பரவலாக அதிகரித்து வருவது கண்கூடு. பொதுவாக சமகாலத்தில் பலராலும் அலசப்பட்டு வருகின்ற ஒரு விவகாரம் தான் குழந்தைகளைத் தத்தெடுத்தல், அது பற்றிய ஷரீஆ கண்ணோட்டம், அதற்காக இஸ்லாம் முன்வைக்கும் மாற்றுத் தீர்வு என்பனவாகும். எனவேதான் அது பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரையை இஸ்லாத்தின் அடிப்படை மூலாதரங்களின் வழிநின்று ஏனைய இஸ்லாமிய அறிவு முதுசங்களின் பின்புலத்திலும், நவீன கால இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தோட்டத்திற்கும் அமைவாகவும் எனது இந்த ஆய்வுக் கட்டுரையில் முன்வைக்க முயல்கிறேன். இவ்வாய்வு தத்தெடுத்தல் என்பதன் பொருள், அதன் வரலாற்று போக்கு மற்றும் இஸ்லாத்தின் நிலைப்பாடு, அதற்குப் பகரமாக இஸ்லாம் முன்வைக்கும் மாற்றுத் தீர்வுகள் போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளன.

## ஆய்வுப் பிரச்சினை

பொதுவாக முஸ்லிம் சமூகத்தில் தத்தெடுத்தல் சர்வசாதாரணமாக இடம்பெறுவதுடன் அது பற்றிய இஸ்லாமிய நோக்கைத் தெரியாது பலர் செயற்படுகின்றனர். அதனால் சமூகத்திலும் குடும்பங்களிலும் முறையற்ற பல விளைவுகள் ஏற்படுகின்றன.

எனவே இது பற்றிய ஷரீஆ நிலைப்பாட்டை ஆராய்ந்து பிள்ளைப் பாக்கியம் அற்றவர்கள் முதலானோருக்கு வழிகாட்டல்களைக் கண்டறியும் வகையில் இந்தஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. குழந்தைகளை தத்தெடுத்தல் என்ற விவகாரம் இஸ்லாத்தின்அடிப்படைகளோடு எந்த அளவுக்கு ஒத்துச் செல்கின்றது என்பதைக் கண்டறிதல்.
2. குழந்தைகளை தத்தெடுப்பதனால் வரும் பாதக விளைவுகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
3. குழந்தைகளை தத்தெடுத்தலுக்குப் பகரமாக இஸ்லாம் முன்வைக்கும் மாற்றுத் தீர்வுகளை இணம்காட்டல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு பண்புசார் ஆய்வாகும்(Qualitative Research). இதற்கான தரவுகள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்றஇஸ்லாத்தின் அடிப்படைமூலாதாரங்கள் மற்றும் நூல்கள்,ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

குழந்தையைத் தத்தெடுத்தல் என்பது இஸ்லாமிய ஷரீஆ கவனம் செலுத்திய ஒரு முக்கிய விவகாரமாகும். இது தொடர்பான அல்குர்ஆன் வசனங்களுக்கான தப்ஸீர்களிலும், இன்னும் சில சட்ட நூல்களிலும் இஸ்லாமிய அறிஞர்கள் இதுபற்றிப் பேசியுள்ளனர்.ஆனால் மிகவும் சொற்பமாகவே இத்தலைப்பில் தனியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

“ அல் இஸ்தில்ஹாக் வத்தபன்னீ பிஷ்ஷரீஆ இஸ்லாமிய்யா’’ என்ற கலாநிதி யூசுப் அல் கர்ழாவியின் நூல் தத்தெடுத்தல் பற்றிய பொதுவான அறிமுகத்தையும் அதன் வரலாற்றையும் ஆய்வு செய்வதுடன், இஸ்லாம் எவ்வாறு அதனை எதிர்கொண்டது என்பதனை குர்ஆன் சுன்னாவின் ஒளியில் பேசுகிறது.

அதேபோன்று ஸைனுல் ஹுஸைன் அவர்களால் இஸ்லாமிய சிந்தனையில் எழுதப்பட்ட “தத்தெடுத்தல்’’ தொடர்பான கட்டுரை, தபன்னீ பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டை விளக்கிய போதும் அதற்கான மாற்றீடுகளைப் பற்றிப் பேசுவதில்லை.

இந்த ஆய்வு மேற்குறிப்பிட்ட ஆய்வுகளில் ஆய்வுக்குட்படுத்தப் படாத தபன்னீ இற்கான மாற்றீடுகளை பற்றி ஆய்வு செய்கிறது.

**பிள்ளையை தத்தெடுத்தல்**

தத்தெடுத்தல் என்ற செயன்முறையை அரபு மொழியில் ‘அத்தபன்னீ’என்ற சொல் குறிக்கும். இப்பதம் ‘தபன்னா’ என்ற வினைச்சொல்லின் அடியாக பிறந்ததாகும். ‘தபன்னா’ என்றால் ஒருவர் இன்னொருவரது குழந்தையை தன் மகனாக எடுத்துக்கொண்டார் எனப் பொருள்படும். எனவே,‘அத்தபன்னி’ என்ற தனக்கு சொந்தமில்லாத ஒருவரை தன் மகனாக எடுத்துக் கொள்ளல் என்பதாகும்.

இஸ்லாமிய ஷரீஆவின் பரிபாஷையில் இப்பதத்திற்கு இஸ்லாமிய அறிஞர்கள் பல விளக்கங்களை முன்வைக்கின்றார்கள்.

அவற்றினுள் சமகால இஸ்லாமிய சட்ட வல்லுனர்களில் ஒருவரான அப்துல் கரீம் ஸய்தான் அவர்கள் முன்வைக்கும் வரைவிலக்கணம் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகவும் பொருத்தமானதாகவும் காணப்படுகின்றது.

“அத்தபன்னி” தத்தெடுத்தல், சுவீகரம் கொள்ளல், மாற்றான் பிள்ளையை தனது பிள்ளையாக எடுத்துக்கொண்டு அவனை தனது இந்திரியத்திலிருந்து வந்த சொந்த பிள்ளையாக பார்த்தல், தனது சொந்த பிள்ளைக்குள்ள அனைத்து உரிமைகளையும் அந்த பிள்ளைக்கு வழங்குதல் முதலானவற்றை தத்தெடுத்தல் என்ற பதம் குறிக்கின்றது.[89]

இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன்பே அரேபிய சமூகத்தில் பிறர் பிள்ளையை தத்தெடுத்து தன் பிள்ளையாக மாற்றிக்கொள்ளும் மரபு புரையோடிப்போயிருந்தது. எளிதில் இவ்வாறு செய்யவோ, மாற்றவோ முடியாத அளவிற்கு அவ்வழக்காறு அவர்களது மூதாதையர்களிடமிருந்து அனந்தரமாக பெறப்பட்டிருந்தது.

ஜாஹிலிய்ய சமூகத்தில் பிறரது பிள்ளைகளை தத்தெடுக்குமொருவர் அப்பிள்ளையிடம் “நீ எனது மகன், எனது வாரிசுச் சொத்தில் உனக்கு பங்குண்டு. அதே போன்று உனது வாரிசு சொத்தில் எனக்கும் பங்குண்டு” என்று கூறுபவராக இருந்தார். இவ்வாறு செய்வதன் மூலம் அப்பிள்ளை அவரது சொந்த பிள்ளையாக மாறுவதாக கொள்ளப்பட்டது.வாரிசுரிமையில் மாத்திரமின்றி விவாகம், விவாகரத்து போன்ற அனைத்து விவகாரங்களிலும் சொந்த பிள்ளைக்குரிய சட்டங்களே வளர்ப்புப் பிள்ளைமீதும் அமுல்படுத்தப்பட்டது.[90]

யூதர்களுக்கு வழங்கப்பட்ட வேதநூலான தௌராத்திலும், தத்தெடுத்தல் என்கின்ற பிறர் பிள்ளையை சுவீகாரம் கொள்ளும் இவ்வழக்காறு தடைசெய்யப்பட்டிருந்தது.[91]

**தத்தெடுத்தல் பற்றிய ஷரீஆவின் நிலைப்பாடு**

குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதற்கு பல்வேறு காரணிகள் தூண்டுதலாக அமைகின்றன. தத்தெடுப்பவர் தனக்கு குழந்தைப்பாக்கியம் இல்லாமையினால் தனது சந்ததியை நிலைக்கச்செய்வதற்காகவும், தனக்கு ஆறுதலுக்காவும் தனது தனிமையை போக்கிக் கொள்வதற்காகவும், தான் முதுமையடைகின்ற போது தன்னைப்பராமரிப்பதற்கு ஒரு பிள்ளை தேவை என்பதற்காகவும் சிலர் குழந்தைகளை தத்தெடுக்கின்றனர். மேலும் தமது பலத்தை அதிகப்படுத்தி மற்றவர்ளை மிகைப்பதற்காகவும் அதிக குழந்தைகளை தன்னகத்தே வைத்திருப்பதற்காகவும், குறிப்பிட்ட ஒரு குழந்தையை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காகவும் இன்னும் சிலர் தத்தெடுக்கின்றனர். சொந்தப் பிள்ளைகள் இருக்கின்ற சிலர் தமது சொந்தப் பிள்ளைகளுக்கு வாரிசுரிமையில் பங்கு செல்லக்கூடாது அல்லது அவர்களுக்குக் குறைவாக கிடைக்க வேணடும் என்ற நோக்கிலும் குழந்தைகளைத் தத்தெடுக்கின்றனர்.மேற்குறித்த தூண்டல் காரணிகளால் “அத்-தபன்னி” என்ற நடைமுறை தோற்றம் பெற்றது. இப்பிழையான வழக்காறு சமூக அரங்கில் பல்வேறு பாதக விளைவுகள் தோன்றுவதற்கு வழியமைத்தது என்பதை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

I. ஒருவர் மாற்றான் பிள்ளையை தன் பிள்ளையாக மாற்றிக் கொள்ளும் போது அங்கு இரு பரம்பரைகள் மாறுபடுகின்றன.

---

[89] ஆஷூர், ஸெய்யித் முஹம்மத், (1970).
[90] யூசுப் அல் கர்ளாவி,(2000).
[91] ஆஷூர், ஸெய்யித் முஹம்மத், (1970).

II. தத்தெடுத்தல் என்ற செயன்முறையினால் சொந்த பிள்ளைகளது உரிமைகள் மீறப்படும் அல்லது அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் இல்லாது போகும் அபாயம் அங்கே உருவாகும். உதாரணமாக குறிப்பிட்ட ஒருவரின் அனந்தரச் சொத்திலிருந்து பரிசாகவோ அல்லது பிள்ளை என்ற அடிப்படையில் அனந்தரமாகவோ கொடுக்கப்படும் போது அடிப்படையில் அனந்தரக்காரர்களாக உள்ள சொந்த பிள்ளைகளின் உரிமைகள் மீறப்படுகின்றன.

III. பொறாமை, வஞ்சகம், குடும்ப உறவுகள் துண்டிப்பு போன்ற விடயங்களுக்கு வழியமைக்கும்.
வளர்ப்பு மகனுக்கு மகனின் சொத்திலிருந்து பங்கு செல்கின்றபோது சொந்த பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய சொத்தில் குறைவு ஏற்படுகின்றது. இதன் விளைவாக அங்கே குடும்பத்தில் பொறாமை, குரோதம், குடும்ப உறவுகள் முறிவு போன்ற பாதக விளைவுகளை தோற்றுவிக்கின்றது.

IV. குழந்தைகளை தத்தெடுப்பதன் விளைவாக அந்தக் குழந்தைகளின் உண்மையான பரம்பரை, வம்சாவழி அந்தக் குழந்தைக்கு இல்லாமல் போகின்றது. அவர்களை விட்டும் தடுக்கப்படுகின்றது. அல்குர்ஆனிலே அல்லாஹ் “நீங்கள் அவர்களை அவர்களது தந்தைமார்களின் பெயரைக் கொண்டு அழையுங்கள்” என்கின்றான்.[92]

V. அல்லாஹ் ஹலாலாக்கிய விடயங்களை ஹராமாக்கவும்,அல்லாஹ் ஹராமாக்கிய விடயங்களை ஹலாலாக்கவும் இப்பிழையான வழக்காறு இட்டுச்செல்லும். ஒரு குழந்தையை தத்தெடுப்பதன் மூலம் அந்தக் குழந்தைக்கு அந்த வீட்டில் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் கூட தடைசெய்யப்படுகின்றது. அதே போன்று தனக்கு தனித்திருக்க முடியாத அந்த வீட்டிலுள்ள அஜ்னபியான பெண்கள் மஹ்ரமிகளாகப் பார்க்கப்பட்டு அவர்களுடன் தனித்திருக்கவும் வாய்ப்பை இந்த உறவு ஏற்படுத்துகின்றது. இதனால் பாவச்செயல்கள் நிகழ்வதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. இக்காலத்தில் இரத்த உறவுக்குள்ளேயே பல முறைகேடுகள்இடமபெறுகின்றன.இவ்வாறானஒரு சூழலில் எந்த உறவும் தொடர்புமற்ற ஓர் அந்நிய ஆடவனுடன் தனிமையில் இருக்கும் போது தவறுகள் நடக்காது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. எனவே இது இஸ்லாமிய ஷரீஆவில் தடைசெய்யப்பட்ட ஒரு விடயம், இதனை மீறிச் செயற்படுவது ஷரீஆ சட்டங்களை கேள்விக்குள்ளாக்குவது போன்றதாகும்.

VI. வீட்டிலே உள்ள அந்தரங்க விடயங்கள் தத்தெடுக்கப்படும் பிள்ளைக்கு தெரியவருதல் அவனுக்கு அல்லது அவளுக்கு அனுமதிக்கப்படாத விடயங்களைப் பார்ப்பார்கள். ஏனென்றால் மனிதன் இயல்பிலே தனது வீட்டில் ஆடைகளை அரைகுறையாக களைந்து விட்டு அல்லது தளர்த்தியவனாக நடமாடுவான். அது அவனது சுதந்திரம். எனவே, இதனை தனது சொந்தப் பிள்ளைகள் பார்ப்பது போன்று தத்தெடுக்கப்படும் பிள்ளைக்கு பார்க்க முடியாது.

VII. தத்தெடுக்கப்பட்ட பிள்ளை அந்தக் குடும்பத்தின் அங்கத்தவர்களில் ஒருவராக மாறி இன்னாரின் மகன் இன்னார் என்று பெயர் மாறிய போதிலும் அடிப்படையில் அது அவ்வாறில்லை.

மேற்குறித்த பாதகமான விளைவுகளை கருத்தில் கொண்டு இஸ்லாமிய ஷரீஆ,தத்தெடுத்தல் என்ற விடயம் பற்றி மிகவும் தெளிவாகவும் துள்ளியமாகவும் விளக்க்கின்றது. இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றுதான் மனித நலனைக் காத்தலாகும்.

அந்த வகையில் இஸ்லாமிய குடும்பவியல் சட்டங்கள் அனைத்தும் மனிதனது ஆகுமான அபிலாசைகளை நிறைவு செய்வதற்கான ஒழுங்குகளை செய்துள்ளதோடு மனித

[92] அல்அஹ்ஜாப், வசனம்: 05

பரம்பரையை பாதுகாப்பதில் மிகவும் கண்டிப்பாகவும் கவனமாகவும் இருக்கின்றது.எனவேதான் விபச்சாரத்தை தடை செய்த இஸ்லாமிய ஷரீஆ திருமணத்தை ஆகுமாக்கி ஊக்குவிக்கின்றது,

ஜாஹிலிய்ய சமூகத்தில் காணப்பட்ட இஸ்லாத்திற்கு முரணான அதிகமான மரபுகளைப் படிமுறை அமைப்பில் தடைசெய்த இஸ்லாம் தத்தெடுக்கப்பட்ட வளர்ப்புப் பிள்ளையை சொந்தப் பிள்ளையாக உறவு கொண்டாடுவதை படிமுறை அமைப்பிலன்றி ஒரே தடவையில் தடை செய்தது. 'மேலும் உங்கள் வளர்ப்புப் பிள்ளைகளை உங்கள் புதல்வர்களாகவும் (அல்லாஹ்) ஆக்கவில்லை'. இவையாவும் உங்கள் வாய்களால் கூறும் உங்கள் வார்த்தைகளைத் தவிர உண்மையில்லை. மேலும் அல்லாஹ் உண்மையைக் கூறுகிறான். அவனே நேர்வழியையும் காட்டுகிறான். ஆகவே நீங்கள் வளர்த்த அவர்களை அவர்களுடைய தந்தைகளுக்கே (அவர்களின் பெயர்களைக் கூறியே) அழையுங்கள். இது தான் அல்லாஹ்விடத்தில் மிக நீதமானதாகும். ஆனால் அவர்களின் தந்தைகளை நீங்கள் அறியவில்லையாயின் அப்போது மார்க்கத்தில் உங்களுடைய சகோதரர்களாகவும் உங்களுடைய சினேகிதர்களாகவும் கருதுகின்றனர். இதற்கு முன்னர் எதில் நீங்கள் தவறு செய்தீர்களோ அதைப் பற்றி உங்கள் மீது எவ்வித குற்றமுமில்லை" (அல் அஹ்ஜாப்:4,5)

வளர்ப்புப் பிள்ளை ஒருபோதும் சொந்தப் பிள்ளையாக மாட்டாது. சொந்தப் பிள்ளை போல் வெறும்வாய் வார்த்தைகளால் அழைக்கப்படுவதைத் தவிர வேறு எந்த உண்மையும் இல்லை என்பதை இந்த திருமறை வசனம் தெளிவுபடுத்துகின்றது. இந்த குர்ஆனிய வசனத்தில் வந்துள்ள''அத்இயா'' என்ற பதம் ''தஈ'' என்ற அரபுச் சொல்லின் பன்மையாகும்.[93]

தந்தையில்லாத வேறொருவரால் பிள்ளை என அழைக்கப்படுபவர் என்பது அதன் பொருளாகும். இதனால் தான் அல்குர்ஆன் அவர்களது உண்மையான தந்தையின் உறவைக் கூறியே அவர்களை அழைக்குமாறு கட்டளையிடுகிறது.

என்றாலும் வளாப்புப் பிள்ளை குறித்து அல்குர்ஆன் முன்வைத்த இக்கருத்தை மக்கள் இலகுவாக ஏற்றுக் கொள்பவர்களாக இருகக்வில்லை. ஜாஹிலிய்யா கால பண்புகளின் சாயல்கள் அவர்களின் உள்ளங்களில் எஞ்சியிருந்ததால் அதனை ஏற்பதில் சங்கடப்பட்டனர்.

இது குறித்து அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே தடை செய்வதுடன் மாத்திரம் நின்று விடாது, ரஸூல் (ஸல்) அவர்கள் மூலமாக செயல் ரீதியாகவும் நடைமுறைப்படுத்திக் காட்டினான். வளர்ப்புப் பிள்ளை பற்றிய சட்டத்தை மக்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியினூடாக இலகுவில் ஏற்றுக்கொள்வதற்கான பீடிகையை அல்குர்ஆன்ஸூராஅல் அஹ்ஜாபில்''உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் அதிகமாக நினைவு கூறுபவராக இருப்பவருக்கு அல்லாஹ்வின் தூதரிடம் திட்டமாக அழகிய முன்மாதிரி இருக்கிறது''என்று முன்வைக்கிறது.[94]

ரஸூல் (ஸல்) அவர்கள் ஸைத் பின் ஹாரிஸா என்பவரை தத்தெடுத்து வளர்த்தார்கள். அதன் பின்னர் ஸைத் பின் முஹம்மத் அதாவது நபி (ஸல்) அவர்களின் பிள்ளையென்றே அழைக்கப்பட்டார்கள்.

அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்கள்:

''நீங்கள் வளர்த்த பிள்ளைகளை அவர்களுடைய தந்தைகளுக்கே (அவர்களின் பெயர்களைக் கூறியே) அழையுங்கள், இது தான் அல்லாஹ்விடத்தில் மிக நீதமானதாகும்.''

என்ற குர்ஆன் வசனம் இறங்கும் வரை ஸைத் பின் முஹம்மத் என்றே நாம் அவரை அழைத்தோம். இவ்வசனம் இறங்கியதன் பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஸைதை அழைத்து நீர் ஹாரிஸா பின்ராஹிலின் மகன் என்று கூறினார்கள்''[95] (புகாரி)

---

93 இப்னு மன்லூர், லிஸானுல் அரப், பாகம்:01, பக்: 91

94 அல்அஹ்ஜாப், வசனம்: 21

95 ஸஹஹீஉல் புகாரி

“யாரொருவர் தெரிந்து கொண்டே தன் தந்தையில்லாத வேறொருவரை தந்தையென அழைக்கின்றாரோ அவருக்கு சுவனம் ஹராமாகிவிட்டது.”[96] என்பது நபி மொழியாகும்.

இன்று நடைமுறையில் பரவலாக செய்யப்படும் ஒரு வழக்காறாக இது இருக்கின்றது.வழக்காறுகளை பொருத்த மட்டில் அவற்றைத் தோற்றுவிப்பது மனிதர்களாகும்.இவ்வழக்காறுகள் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றம் பெற முடியும். இதனை இஸலாமிய ஷரீஆ பொதுவாக அங்கீகரிக்கின்றது.

ஷரீஆவின் ஒரு அடிப்படை விதி “அல் ஆதா முஹக்கமா”வழக்காறுகள் சட்ட அங்கீகாரத்தைப் பெறும் என்பதாகும். ஆனால் அக்குறிப்பிட்ட வழக்காறுகள் இஸ்லாமிய ஷரீஆவுக்கு முறணில்லாது இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கவனத்தில் கொள்ளத்தக்கது.
குழந்தைகளைத் தத்தெடுக்கும் நடைமுறை பொதுவாக சமூகத்தில் ஒரு மரபாக இருப்பினும், இதனை நாட்டின் பொதுச்சட்டம் அனுமதித்த போதிலும், மக்கள் அதனை நியாயம்கண்டு அங்கீகரித்த போதிலும் அது தெளிவான சட்ட வசனங்களுக்கு முரணாக அமைந்த ஒரு பிழையான மரபாகவே காணப்படுகின்றது.

இஸ்லாமிய ஷரீஆ கண்ணோட்டத்தில் அல்குர்ஆன், சுன்னாவினுடைய தெளிவான வசனங்கள் மற்றும் இஜ்மாவான நிலைப்பாடு தத்தெடுத்து வளர்த்தல் என்பது இஸ்லாத்துக்கு முரணான தடை செய்யப்பட்ட ஒரு விடயமாகும்.

**குழந்தையைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு பகரமாக இஸ்லாம் முன்வைக்கும் மாற்றீடுகள்**

மனித நலன்களை உயரிய நிலையில் பேணி அதனை பாதுகாத்து அவர்களுக்கு வரவிருக்கும் தீங்குகளை விட்டும் பாதுகாப்பதே இஸ்லாமிய ஷரீஆவின் உயரிய நோக்கமாகும்.

அந்த வகையில் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதில் மனிதனின் ஒரு சில அபிலாசைகள் நிறைவேறிய போதும் அதனால் மனித நலனுக்கு ஏற்படும் பாதக விளைவுகள் அதிகம் என்பதனால் இஸ்லாம் அதனை தடை செய்கிறது. அவ்வாறு தடைசெய்த இஸ்லாம் அதற்கான மாற்றீடுகளை ஏற்படுத்தித்தரத் தவறவில்லை. எனவேதான் இஸ்லாம் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு பகரமாக முன்வைக்கும் மாற்றீடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

(1) **வலாஉல் மவாலாத்- இதன் கருத்து மார்க்கத்தில் சகோதரனாக மாற்றிக் கொள்ளல் என்பதாகும்.**[97] இவ்வாறு சகோதரனாக மாற்றுவது என்பது ஒருவர் தான் விரும்பும் ஓர் சகோதரனை தனக்கு மிகவும் நெருக்கமான ஒரு சகோதரனாக மாற்றிக் கொள்வதைக் குறிக்கும்.
அடிப்படையில்இஸ்லாத்தில் அனைவரும் சகோதரர்களாவர்.‘‘மு.்.மீன்கள் அனைவரும் சகோதரர்களே!’’[98] இது அனைத்து முஸ்லிம்களையும் குறிக்கும்.
ஆனால் வலாஉல் மவாலாத் எனும் வழிமுறையில் சகோதரனாக மாறுவது என்பது இஸ்லாத்தின் பொது வான சகோதரத்துவத்தை விட அந்தஸ்தில் உயர்ந்த ஈமானிய சகோதரத்துவ வாஞ்சையையே அது குறித்து நிற்கின்றது.
பிறர் குழ்ந்தைகளைத் தத்தெடுத்து தன் குழந்தையாக மாற்றிக்கொள்வதை தடைசெய்த இஸ்லாம் அதே இடத்திலேயே அதற்கான மாற்றீடுகளில் ஒன்றாக இந்த வலாஉல் மவாலாத்தை கூறுகின்றது. ஸைத் பின் ஸாபித் (ரழி) ரஸூல் (ஸல்)

[96] ஸஹீஹுல் புகாரி பக்கம்: 55, ஹதீஸ் எண்: 6385
[97] முஹம்மத் அமீன் அல் பத்கீ கவாயிதுல் பிக்ஹ், தாருல் ஸதப் பதிப்பகம் , பக்:211
[98] அல்ஹுஜுராத் வசனம்:10

அவர்களின் மவ்லாவாகவும், ஸாலிம், அபூ ஹுதைபா (ரழி) அவர்களின் மவ்லாவாகவும் (மார்க்கத்தில் நெருங்கிய சகோதரனாக) மாறினார்கள்.

ஒருவர் இன்னொருவருக்கு மவ்லாவாக மாறுமபோது அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரின் அனைத்து விதமான இன்பதுன்பங்களிலும் பங்கெடுக்கக்கூடியவர்களாக இருப்பர். அவர்களில் ஒருவரது உயிருக்கு, மார்க்கத்திற்கு அல்லது சொத்துக்கு ஏதேனும் பங்கம் ஏற்படுகின்ற பொழுது மற்றவர் அது தனது உயிருக்கும், மார்க்கத்திற்கும், மானத்திற்கும், சொத்திற்கும் ஏற்படும் பங்கமாகக் கருதி அவரைப் பாதுகாப்பார். இங்குதான் பொதுவான இஸ்லாமிய சகோதரத்துவத்தை விட்டும் வலாஉல் மவாலாத் எனும் மாற்றீடு வேறுபட்டு நிற்கின்றது. எனவேதான் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதை தடைசெய்த இஸ்லாம் அதற்கான சிறந்த மாற்றீடுகளில் ஒன்றாக வலாஉல் மவாலாத்தை முன்வைக்கின்றது.

### (2) அல் முஸாஹரா- திருமணத்தின் மூலம் உறவாக மாற்றிக் கொள்ளல்

அல் முஸாஹரா என்றால் மொழிக்கருத்தில் ''தூரமாக இருந்த ஒருவர் நெருக்கமான உறவாக மாறுதல்''[99] என பொருள்படும். பரிபாஷைக் கருத்தில் அல் முஸாஹரா என்றால் "தூரமான ஒருவர் திருமணத்தின் மூலம் நெருங்கிய உறவாக மாறுவதைக் குறிக்கும்.[100]

இஸ்லாத்தில் ஒருவர் இன்னொருவரது உறவாக மாறுவதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அவை இரத்தத்தின் மூலமாகவும், திருமணத்தின் மூலமாகவும், பால்குடியின் மூலமுமாகவும் அது ஏற்படுகிறது. எனவேதான் இந்த குறிப்பிட்ட உறவுகள் மூலம் சிலர் திருமணம் முடிப்பதற்கு தடைசெய்யப்பட்ட மஹ்ரம்களாக மாறுகின்றனர். இவ்வாறான வழிமுறைகளில் உறவாக மாறுவதால் ஒவ்வொருவருக்கும் சில உரிமைகளும் கடமைகளும் உருவாகின்றன. ஆனால் தத்தெடுத்து வளர்ப்பதனால் இவ்வாறான எவ்வித மாற்றங்களும் ஏற்படுவதில்லை. எனவேதான் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதை தடைசெய்த இஸ்லாம் அதற்கான சிறந்த மாற்றீடுகளில் ஒன்றாக திருமணத்தின் மூலமாக உறவாக மாற்றிக்கொள்வதை ஆக்கியுள்ளது.

### (3) அர் ரழா: பாலூட்டுதல் மூலம் குழந்தையாக மாறுதல்

அரபு மொழியில் அர் ரழா என்றால் பாலூட்டல்[10] என்று பொருளாகும். பரிபாஷையில் ''ஒரு குழந்தைக்கு அதனது தாய் அல்லாத வேறொரு பெண் பாலூட்டுவதைக் குறிக்கும்''. இந்த வழக்கம் அரபிகள் மத்தியில் பொதுவாக இருந்த மரபாகும். இஸ்லாமும் அதனை அனுமதித்து இவ்வாறு பால் குடியால் உருவாகும் உறவானது இரத்தத்தின் மூலம் உருவாகும் உறவு போன்றதே என்று கூறியது. ரஸூல் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக பின்வருமாறு கூறினார்கள்: ''இரத்த உறவின் மூலம் யாரெல்லாம் மஹ்ரமிகளாக மாறுகின்றார்களோ அவர்கள் அனைவரும் பால்குடி உறவாலும் மஹ்ரம்களாக மாறுகின்றனர்''[101] (ஸஹீஹ் புகாரி) குழந்தைகளைத் தத்தெடுத்து வளாப்பதற்கு பகரமாக பால்குடி மூலம் உறவாக மாற்றிக் கொள்வதால் அங்கே இரண்டு விதமான சட்டங்கள் பிறக்கின்றன:

- திருமணம் தொடர்பான சட்டம்
  இரத்த உறவில் யாரெல்லாம்திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட வில்லையோ அவர்கள் அனைவரும் பால்குடி உறவினாலும் தடைசெய்யப்படுகின்றனர்.

- இரத்த உறவில் யாரெல்லாம் மஹ்ரம்களாக மாறுகிறார்களோ அவர்கள் அனைவரும் பால்குடி உறவாலும் மஹ்ரம்களாக மாறுகின்றனர். பாலூட்டப்படும்

---

[99] மு.ஃ.ஜமு மகாயிஸு அல்லுஹா அல் அரபிய்யா, பா:03, பக்: 315

[100] முஹம்மத் இப்னு அஹமத் அல் அஸ்ஹரீ, தஹ்தீபுல் லுஹா, தாரு இஹய் ாயித்துராஸ், அல் அரபீ பதிப்பகம். [10]இப்னு மன்லூர், ஸிஸானுல் அரப்.

[101] ஸஹீஹுல் புகாரி, ஹதீஸ் எண்:2501 ஸஹீஹுல் முஸ்லிம் ஹதீஸ் எண்:1445

குழந்தையின் வயதெல்லை தொடர்பாக இஸ்லாமிய சட்ட வல்லுனர்கள் மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றின் பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்து பாலூட்டப்படும் குழந்தை இரண்டு வருடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதாகும்.[102]

(04) **அல் கபாலா- பொறுப்பேற்றல்**

குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு மாற்றீடாக இஸ்லாம் முன்வைக்கும் இன்னுமொரு தீர்வுதான் குழந்தைகளைப் பொறுப்பேற்று பராமரித்து பயிற்றுவித்தல்[103] என்பதாகும். கபாலா என்றால் ‘‘உத்தரவாதம்’’, ‘‘பொறுப்பு’’ என பொருள்படும். அதாவது ஒருவர்இன்னொரு வரை தன்பொறுப்பில் எடுத்து அவருக்கான முழுப்பராமரிப்பு செலவினங்களையும் வழங்குவதைக் குறிக்கும்.

இஸ்லாம் இந்த உயரிய செயலை வரவேற்கின்றது. அதன்பால் எம்மைத் தூண்டுகின்றது. அபூபக்கர் (ரழி) அவர்கள் மிஸத்பின் அஸாஸா (ரழி) அவர்களை தனது பராமரிப்பில் வைத்திருந்தார்கள். அவருக்கான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். இவ்வாறு பொறுப்பேற்பதனால் அநாதைகளது, ஆதரவற்றவர்களது நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ‘‘நானும் அநாதை குழந்தைகளை பராமரிப்பவரும் நாளை மறுமையில் இவ்வாறு நெருக்கமாக இருப்போமென தனது இரு விரல்களை இணைத்து காட்டி கூறினார்கள்’’[104] மகாஸிதுஷ் ஷரீஆ என்ற ஷரீஆவின் இலக்குகளில் மிகப் பிரதானமானதும் அடிப்படையானதுமான பணி மனித நலன்களைப் பாதுகாப்பதேயாகும்.அந்த வகையில் கபாலா எனும் பொறுப்பேற்றல், உத்தரவாதமளித்தல் என்கின்ற விடயம் முழுக்க முழுக்க மனித நலன்களைப் பாதுகாப்பதற்காகவே அமைகின்றது. இஸ்லாம் தடை செய்திருக்கின்ற தத்தெடுப்பதை விட்டுவிட்டு இவ்வாறு குழந்தைகளை பொறுப்பேற்று அவர்களது பராமரிப்பிற்கும் பயிற்றுவிப்பிற்கும் உதவுவது ஓர் உன்னத செயலாகும்.

(5) **அல் வஸீய்யா- உயில் எழுதுதல், மரணசாசனம்**

அல் வஸீய்யா என்பது ஒருவர் தனது மரணத்தருவாயில் அல்லது அதற்கு முன்பு தனது அனந்தரகாரர்கள் அல்லாத மற்றவர்களுக்கு தனது சொத்தில் மூன்றில் ஒரு பகுதியை உயிலாக எழுதுவதைக் குறிக்கும்.[105] ஒருவர் இவ்வாறு உயில் எழுதி விட்டு மரணித்தால் அது அவரது சொத்திலிருந்து நிறைவேற்றப்படும். அவ்வாறு நிறைவேற்றுவது கடமையாகவும் மாறிவிடுகின்றது. ஆனால் அவர் வாரிசுச் சொத்தில் பங்கு பெரும் ஒருவருக்கு இவ்வாறு உயில் எழுதிவிட்டுச் சென்றால் அது நிறைவேற்றப்படமாட்டாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘வாரிசுக்காரர்களுக்கு எந்தவித வஸிய்யத்தும் கிடையாது’’[106] (அபூ தாவூத்) எனவே யார் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்க முனைகின்றாரோ அவர் அதற்கு மாற்றீடாக அந்தக் குழந்தைக்கு உயில் எழுதி வைக்க முடியும்.

அவ்வாறு செய்வதனால் திருமண உறவின் மூலமோ அல்லது பால்குடி உறவின் மூலமோ கிடைக்கும் உறவை இவர் பெறமாட்டார். ஆனால் அந்த குழந்தையின் நலன் இங்கு பாதுகாக்கப்படும்.

‘‘உங்களுடைய மார்க்கத்தில் சகோதரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்’’ இந்த திருமறை வசனத்திற்கு இமாம் இப்னு கஸீர் (ரஹ்) விளக்கமளிக்கும்

---

[102] அல் பகரா: வசனம் 233

[103] இப்னு மன்லூர், லிஸானுல் அரப், தாருல ஸாதிர் பதிப்பகம், பெய்ரூத் பா:11, பக்:58

[104] புகாரி, ஸஹீஹுல புகாரி கிதாபுல் அதப் ,பக்கம்: 451, ஹதீஸ் எண்: 5659
[105] இப்னு மன்லூர், லிஸானுல் அரப், தாருல ஸாதிர் பதிப்பகம், பெய்ரூத் பா:11, பக்:321
[106] புகாரி, ஸஹீஹுல புகாரி கிதாபுல் வஸாயா, ஹதீஸ் எண்: 2596

போது ''அவர்களுக்கு வாரிசாக செல்வதை குறிப்பதாகவும் அந்த வாரிசுரிமை உதவியாகவோ, நன்மையாகவோ, நல்ல உறவாகவோ, அவர்களுடன் அழகிய முறையில் நடப்பதாகவோ, வஸிய்யத் ஆகவோ இருக்கலாம் என்கிறார்.''[107]

இமாம் ஸயீத் இப்னு முஸைய்யிப் இது பற்றி கூறும் போது: ''இந்த வசனம் இறங்கிய போது யாரெல்லாம் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்த்துக் கொண்டிருந்தார்களோ அவர்கள் அந்தக் குழந்தைகளைதமது மார்க்கத்தின் சகோதரர்களாக மாற்றிக்கொண்டார்கள். மேலும் தமது உறவினர்கள் தமது சொத்தில் அனந்தரக்காரர்களாகவும் தாம் வளர்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு தமது சொத்தில் வஸிய்யத் எனும் உயில் எழுதியும் வைத்தார்கள்''[108] என்கிறார். எனவே இதனை இஸ்லாம் தத்தெடுத்து வளர்ப்பதற்கான ஒரு சிறந்த மாற்றீடாக முன்வைக்கின்றது.

(6) **அல் ஹிபா- அன்பளிப்பாக வழங்குதல்**

இஸ்லாம் என்பது தாராளத் தன்மையின் உறைவிடம், வாரி வழங்கிய அபூ பக்கர்களை உருவாக்கிய உன்னத மார்க்கம். குழந்தை இல்லாதவர்கள் அல்லது மேலதிக குழந்தைகளின் பால் தேவையுள்ளோர் மீது குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதைத் தடைசெய்த இஸ்லாம் அதற்கான பிரதியீடுகளில் ஒன்றாக ஒருவர் தனது வாழ்நாளிலே தனது சொத்திலிருந்து இவ்வாறான ஆதரவற்ற பிள்ளைகளுக்கு அன்பளிப்பாக வழங்குவதை அனுமதித்துள்ளது. அவ்வாறே அதன்பால் ஆர்வமூட்டியுள்ளது.''நன்மையான காரியங்களிலும், அல்லாஹ்விற்கு அஞ்சிநடக்கும் விடயத்திலும் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்.''[109] (அல் மாயிதா:2)

''பரஸ்பரம் அன்பளிப்புக்களை பரிமாரிக்கொள்ளுங்கள். உங்கள் மத்தியில் நேசம் பெருகும்.''[110]

எனவே இஸ்லாம் ஒரு விடயத்தில் அனுமதி மறுத்து, ஒரு கதவை அடைத்தால் இன்னும் பல கதவுகளை அவ்விடயத்தில் திறந்துவிட்டிருக்கும். குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதை தடைசெய்த இஸ்லாம் அவ்வாறு தத்தெடுப்பதால் அக்குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் பயன்களை தடைசெய்யவில்லை. மாற்றமாக வேறு வழிகளினூடாக இவ்வாறான மாற்றீடுகளின் ஊடாக அப்பயன்கள் அவர்களை சென்றடைய வழிவகுத்தது.

**முடிவுரை**

தபன்னி என்ற பிரயோகம் பிறரது பிள்ளையை தனது சொந்தப் பிள்ளையாக மாற்றிக் கொள்ளும் சம்பிரதாயத்தைக் குறிக்கும். ஷரீஆவின் தெளிவான வாசகங்களின் ஊடாக இத்தகைய நடைமுறை தடை செய்யப்பட்டிருப்பதை மேலுள்ள ஆய்வு தெளிவுபடுத்துகின்றது. பிழையான வழக்காறுகள் அல்குர்ஆன் சுன்னாவின் நேரடி வசனங்களுடன் முரண்படும் போது சட்ட வசனங்களுக்கு முன்னுரிமை வழங்குவதுதான் இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தினுடைய அடிப்படை என்பது புரியப்படல் வேண்டும்.இப்பிழையான வழக்காறுகளினூடாக சமூக அரங்கில் பல்வேறு மோசமான பாதக விளைவுகள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றை சுட்டிக் காட்டுவதுடன்,இவ்வாய்வில் பிள்ளைப் பாக்கியம் அற்றவர்கள் எத்தகைய மாற்றீடுகளை நோக்கி நகரலாம் என சில வழிகாட்டல்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

---

[107] இப்னு கஸீர், தப்ஸீருல் குர்ஆனில் அலீம்

[108] அப்துல் மஜீத் மஹ்மூத், 2004.

[109] அல் மாயிதா :02

[110] அஹ்மத் இப்னு அலீ அல் கன்ஆனி, அத்தல்கீஸ் அல் கபீர், குர்துபா பதிப்பகம், கிதாபுல் கிபா, ஹதீஸ் எண்: 1352

**உசாத்துணைகள்:**


1) முஹம்மத் இஸ்மாஈல் புகாரி, (2004).ஸஹீஹுல் புகாரி. பைரூத், மக்தபா அல்அஸ்ரிய்யா.

2) இப்னு மன்ழூர்,(1995). லிஸானுல் அரப்.

3) இஸ்மாஈல் இப்னு உமர் இப்னு கஸீர், தப்ஸீருல் குர்ஆனில் அழீம். தாருல் கலம் லித்துராஸ் பதிப்பகம்.

4) முஹம்மத் அமீன், (1992). கவாயிதுல் பிக்ஹ். தாருல் லதப் பதிப்பகம்.

5) ஆஷுர், ஸெய்யித் முஹம்மத், (1970). அத்தபன்னீ பில் அத்யானிஸ் ஸமாவிய்யா வமா கப்லஹா. தாருல் இத்திஹாத் அல் அரபி பதிப்பகம்.

6) அப்துல் மஜீத் மஹ்மூத், (2004).அல்வஜீஸ் பீ அஹ்காமில் உஸ்ரா, காஹிரா, முஅஸ்ஸஸா முக்தார் லின்னஷ்ரி வத்தவ்ஸீ.

7) ஸகரிய்யா அஹ்மத், (1964). அஹ்காமுல் அவ்லாத் பில் இஸ்லாம். காஹிரா, அத்தாருல் கவ்மியா லித்திபாஆ வன்னஷ்ர்.

8) யூசுப் அல் கர்ளாவி,(2000), அல் இஸ்தில்ஹாக் வத்தபன்னீ பிஷ்ஷரீஆ இஸ்லாமிய்யா, மக்தபா வஹ்பா பதிப்பகம்.

9) முஹம்மத் இப்னு அஹ்மத் அல்அஸ்ஹரி, (1975).தஹ்தீபுல் லுஹா.தாரு இஹ்யா அத்துராஸ் அல் அரபி பதிப்பகம்.

10) அஹ்மத் இப்னு பாரிஸ்,(1979). மு.ஃஜமுல் மகாயீஸ் பில் லுஹா. பைரூத், தாருல் ஜீல் பதிப்பகம்